**செய்தி வெளியீடு எண்.486** **நாள்.27.6.2008**

## தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம்

2008–ம் ஆண்டின் பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் ஏழாவது கூட்டத்தொடரில் தமிழக ஆளுநர் உரையில் அரவாணிகளுக்கான புதிய நல வாரியம் ஒன்று அமைக்கப்படும் என மேதகு ஆளுநர் அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில், அரவாணிகளுக்கு முழுமையான சமூக பாதுகாப்பு அளிக்கத் தேவையான திட்டங்களை வகுத்து சிறப்பான முறையில் செயல்படுத்த அரவாணிகள் நல வாரியம் அமைத்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அரவாணிகள் நல வாரிய அலுவல்சார் உறுப்பினர்களாக மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை செயலர், சமூக நலத்துறை ஆணையர், நிதித்துறை செயலர், சட்டத்துறை செயலர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத்துறை இயக்குநர், கல்லூரி கல்வித்துறை இயக்குநர், மருத்துவக் கல்வித்துறை இயக்குநர் மற்றும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் ஆகிய 11 உறுப்பினர்கள் அலுவலர்சார் உறுப்பினர்களாகவும் எஸ்.நூரி–சென்னை, பிரியாபாபு–சென்னை, A.J. ஹரிஹரன்–சென்னை, ஆர். ஜீவா–சென்னை, வி. சலிமா–விழுப்புரம், எஸ்.கே. கங்கா–வேலூர், மோகனா–திருச்சி, எஸ். காதர்மைதீன் என்ற கனிமொழி–மதுரை ஆகிய 8 உறுப்பினர்கள் அலுவல் சாரா உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரவாணிகள் நல வாரியத்தின் முதல் கட்ட கூட்டமானது, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 26.5.2008 அன்று சமூக நல ஆணையரக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரவாணிகள் பற்றிய கணக்கெடுப்பு, அடையாள அட்டை வழங்குவது, இவர்களுக்கென கணினி வகுப்புகள், நூலகம் மற்றும் கவுன்சிலிங் அடங்கிய இடைக்கால தங்கும் மையம் அமைத்துக்கொடுப்பது மற்றும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அந்தந்த மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரவாணியர் குறை தீர்க்கும் நாள் நடத்துவது போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக அரவாணிகளின் நலனுக்காக செயல்பட்டுவரும் தொண்டு நிறுவனங்கள் அந்தந்த மாவட்டங்களில் தங்களுடைய நிறுவனங்களை பதிவு செய்து கொள்ளும் வகையில் பதிவுச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள ஏதுவாக படிவங்கள் மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

எனவே, அரவாணிகளின் நலனுக்காக செயல்பட்டுவரும் சங்கங்கள் / தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தங்களுடைய சங்கங்களை பதிவு செய்து கொள்வதற்காக பதிவு சான்றிதழ்களை பெற அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட சமூக நல அலுவலர்களை தொடர்பு கொள்ள இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9